# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 20.05.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசர், உண்மை அடியார், இக்காலத்தின் இமாம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப தோன்றிய மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களை இறைவன் ஒரு நீண்ட கால இருளுக்குப் பிறகு அனுப்பி நம்மீது மிகப்பெரிய கருணை புரிந்துள்ளான். இதற்காக நாம் இறைவனுக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் அது குறைவானதாகும். இறைவனின் வேத நூலை ஓதி அதை புரிந்து கொள்வதும் அதை நம் வாழ்வின் அங்கமாக்குவதும் தான் அவனுக்கு நன்றி கூறுவதற்கான மிகச்சிறந்த வழியாகும். இறைவன் திருக்குர்ஆனில் 'உண்மையாளர்களுடன் சேர்ந்திருங்கள்' என்று கூறுகிறான். உண்மையாளர்களுடன் சேர்ந்திருப்பதன் பலனைப் பெறுங்கள் என்று கூறுகிறான்.

சஹாபா ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து பயனடைந்தவாறு, அவர்களின் கூட்டங்களில் கலந்து கொண்டு முழுமையாக பயனடைந்தனர். இதைப் பார்க்கும் போது இறைவன் கூறிய காட்சிகள் நமக்குத் தென்படுகின்றன. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கூற்றுக்களை சஹாபாக்கள் நமக்கு தெரியப்படுத்தினார்கள். அவர்களின் அறிவுரைகளை நமக்கு எட்ட வைத்தனார்கள்.

இது இரண்டாவது காலகட்டமாகும். இதில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் தோன்றினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் அழகிய போதனைகளையும் திருக்குர்ஆனின் சிறந்த விளக்கங்களையும் தமது பல்வேறு நூல்களில் எழுதியுள்ளார்கள். இதன் மூலம் இஸ்லாத்தின் சிறப்பை உலகிற்கு எடுத்துரைத்தார்கள். அவர்கள் சஹாபாக்களுடனும் பல சபைகளை நடத்தியுள்ளார்கள். இதில் சில சிறிய சபைகளாகவும் சில பெரிய கூட்டங்களாகவும் இருந்தன. இன்னும் சில மாநாடுகளில் அவர்கள் ஆற்றிய உரை வடிவிலானவையாகும். இவைகள் நூல்களில் காணப்படவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இருப்பின் மூலம் அருள்பெற்ற சபைகளாக அவை இருந்தன. இந்த சபைகளின் நிகழ்வுகளை அந்தக் காலத்தில் ஜமாஅத் செய்தித்தாள்கள் பாதுகாத்தன. காலத்தின் இமாமுடைய சபைகளின் மூலம் பலனடைந்து, உண்மையாளர்களுடன் சேர்ந்திருங்கள் என்ற திருக்குர்ஆனின் கட்டளையின்படி செயல்பட்ட அந்த மக்கள் எவ்வளவு பேறுபெற்றவர்களாவர். நாம் அந்த சபைகளில் அமர்ந்திருந்தவர்கள், பல்வேறு கேள்விகளைக் கேட்பவர்கள் மற்றும் அந்த ஞானம் நிறைந்த கூற்றுக்களைப் பதிவு செய்தவர்களுக்கு நன்றியுடையவர்களாக உள்ளோம். அவர்களின் மூலமாக இன்று நூறு ஆண்டுகள் கழிந்த பின்னரும் நாம் இவ்விஷயங்களை படிக்கவும் கேட்கவும் முடிகிறது. இவைகளை கேட்டும், படித்தும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த உண்மை அடியாரின் சபைகளில் நாமும் அமர்ந்துள்ளதாக கற்பனை செய்து உணர முடிகிறது.

எனவே நான் இன்று இவ்வாறான சபைகளில் தொழுகை, துஆ இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்துவது ஆகியவற்றைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய அறிவுரைகளில் சிலவற்றை எடுத்துள்ளேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 1907 -ல் நடந்த ஆண்டு மாநாட்டின்போது ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இது ஒரு நீண்ட சொற்பொழிவாகும். அதில் ஓரிடத்தில் துஆவின் பக்கம் கவனமூட்டியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்.

''திருக்குர்ஆனை இறைவன் துஆவைக் கொண்டே தொடங்கியுள்ளான். இதை துஆவைக் கொண்டே முடிக்கவும் செய்துள்ளான். இதன் பொருள்: மனிதன் இறைவனின் அருள் இல்லாமல் தூய்மை அடையவே முடியாது என்பதை இது சுட்டிக் காட்டுகிறது. இதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இறைவனிடமிருந்து உதவிகள் கிடைக்காத வரை மனிதன் நன்மைகளில் ஒருபோதும் முன்னேறவே முடியாது. இறைவன் உயிர் அளித்தவர்களைத் தவிர மற்ற எல்லாரும் உயிரற்ற சடலங்கள் ஆவர். இறைவன் நேர்வழி வழங்கியவர்களைத் தவிர மற்ற எல்லாரும் வழி தவறியவர்கள் ஆவர். இறைவன் பார்வை வழங்கியவர்களைத் தவிர மற்ற எல்லாரும் குருடர்களாவர் என்று ஹதீஸில் வந்துள்ளது. இறைவனின் அருள் கிடைக்காத வரை உலக ஆசை என்ற சுமை கழுத்தில் மாலையாக இருக்கும் என்பது உண்மையாகும். இறைவன் தனது அருளை வழங்கியவர்கள் மட்டுமே இதிலிருந்து விடுதலை பெறுகின்றனர். ஆனால் இறைவனின் அருளும் துஆவின் மூலமாகவே கிடைக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இறைவனின் அருளைப் பெற வேண்டும் என்றால் துஆ செய்யுங்கள்''.

**தொழுகையில் ஏற்படும் கவனச் சிதறல்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்:**

''துஆ என்றால் என்ன? வாயால் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்று கூறிக் கொண்டு, இந்த வியாபாரத்தை இப்படி செய்ய வேண்டும். அந்தப் பொருளை வாங்காமல் விட்டு விட்டோமே? இது இவ்வாறு நடந்தால் நாம் இப்படி செய்து விடலாம் என்று மனதில் சிந்தனைகள் ஓடிக் கொண்டிருந்தால் இது வாழ்க்கையை வீணாக்குவதாகும். மனிதன் இறை வேதத்திற்கு முன்னுரிமை வழங்காத வரை அதற்கேற்ப செயல்படவில்லை என்றால் அதுவரை அவனது தொழுகைகள் வெறும் நேரத்தை வீணாக்குவதாகும்''. இதற்காக துஆ செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இது தொடர்பாக ஒரு சம்பவம் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:

''ஒருமுறை ஒரு பெரியவர் பள்ளிவாசலுக்குச் சென்றார். அங்கிருந்த இமாமுஸ் ஸலாத் தொழ வைத்துக் கொண்டிருக்கும் போது தனது வியாபாரத்தைப் பற்றி யோசிக்கத் தொடங்கினார். நான் சரக்கை அமிர்தசரஸில் வாங்கி, டில்லியில் சென்று விற்று இவ்வளவு லாபம் சம்பாதிப்பேன். அதன் பிறகு சரக்கை கல்கத்தா எடுத்துச் செல்வேன். அங்கே எனக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும். அதன் பிறக அங்கிருந்து இன்னும் அடுத்த ஊருக்குச் செல்வேன் என்று யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது பின்னால் நின்று தொழுது கொண்டிருந்த அந்த பெரியவர் தொழுகையை பாதியிலேயே விட்டு விட்டு தனியாக தொழ ஆரம்பித்தார். இறைவன் அவருக்கு இமாமின் மனநிலையை கஷ்ஃப்பின் மூலமாக காட்டி விட்டான். பிறகு தொழுகை முடிந்தவுடன் பின்னால் தொழுத மற்றவர்கள் மவ்லவி சாஹிபே! இந்த மனிதர் தொழுகையை பாதியிலேயே முடித்து விட்டு உங்கள் பின்னால் தொழாமல் தனியாக தொழுதார் என்று புகார் கூறினார். அப்போது மிகவும் கோபங்கொண்டு அவர் ஏன் தொழுகையை பாதியிலேயே விட்டீர். இது எவ்வளவு பாவம்? ஏன் அவ்வாறு செய்தீர் என்று கேட்டார். அதற்கு அவர் மவ்லவி சாஹிபே! நான் ஒரு பலவீனமான வயது முதிர்ந்த மனிதனாவேன். நீங்கள் அமிர்தசரஸில் பயணத்தை ஆரம்பித்து கல்கத்தா வரை சென்று விட்டீர்கள். இன்னும் நீங்கள் புகாரா வரை செல்ல வேண்டியதிருந்தது. நான் இவ்வளவு தூரம் உங்களோடு பயணம் செய்ய முடியாது என்று அந்த பெரியவர் கூறினார்''. எனவே, சிலர் தொழு வைக்கும் போது இது அவர்களின் நிலையாக இருக்கிறது.

**1906 -ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது ஒரு சொற்பொழிவில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

''தொழுகை என்றால் என்ன? இரு ஒரு துஆவாகும். இதில் முழுமையான வேதனையும், வலியும் இருக்க வேண்டும். எனவே தான் இதன் பெயர் ஸலாத் ஆகும். ஏனென்றால் வேதனையும், தீமையிலிருந்து விடுதலையும், உருக்கத்தையும் கொண்டு இறைவன் தீய எண்ணங்களையும், தீய உணர்வுகளையும் நம்மிடமிருந்து விலக்கி தூய அன்பை அதன் இடத்தில் தனது பொதுவான கருணையின் கீழ் நிரப்புவாயாக என்று துஆ செய்ய வேண்டும். ஸலாத் என்ற சொல்லிற்கு வெறும் வறண்ட சொற்களும் துஆக்களும் மட்டும் போதுமானதல்ல. மாறாக அதோடு ஒருவித உருக்கமும், நெகிழ்வும் இருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டுகிறது. துஆ செய்பவர் மரணத்தை எட்டாத வரை இறைவன் அவருடைய துஆவை ஏற்றுக் கொள்ளமாட்டான். துஆ கேட்பது ஒரு கடினமான அம்சமாகும். மக்கள் இதன் உண்மையை அறவே அறியாதவர்களாவர். நாங்கள் இந்த பொழுதில் இந்த வேலைக்காக துஆ செய்தோம். ஆனால் இதற்கு

விளைவு ஏதும் ஏற்படவில்லை என்று எனக்கு பலர் கடிதம் எழுதுகின்றனர். இவ்வாறு கூறுவதால் இவர்கள் இறைவனின் மீது தப்பெண்ணம் கொள்கின்றனர். பின்னர் அவநம்பிக்கை அடைந்து அழிந்து விடுகின்றனர். துஆவின் எல்லா அம்சங்களும் இல்லாதவரை அந்த துஆ எந்தப் பலனையும் தராது என்பதை அவர்கள் அறிவதில்லை.

துஆவின் அம்சங்கள் இவையாகும். மனம் உருகிவிட வேண்டும். ஆன்மா ஏக இறைவனின் சந்நிதானத்தல் தண்ணீரைப் போன்று விழ வேண்டும். ஒருவித வேதனையும், ஒருவித நிம்மதியின்மையும் உருவாக வேண்டும். அதோடு மனிதன் பொறுமையிழப்பதும், அவசரம் காட்டவும் கூடாது. மாறாக பொறுமை மற்றும் உறுதிப்பாட்டுடன் துஆவில் நிலைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அந்த துஆ ஏறறுக் கொள்ளப்படும் என்று நம்பிக்கை வைக்கலாம். தொழுகை மிகவும் உயர் தரமான துஆவாகும். ஆனால் மக்கள் இதன் மதிப்பை புரியாமல் இருப்பது வருத்தத்திற்குரியதாகும். சம்பிரதாயமாக கியாம், ருகூ மற்றும் சஜ்தா செய்து புரிந்தாலும் புரியா விட்டாலும் கிளியைப் போன்று சில வரிகளை உச்சரிப்பது போதுமானது என்று நினைக்கிறார்கள்.

நமக்கும் உண்மையை தேடுகின்ற ஒவ்வொருவருக்கும் தொழுகை என்ற அருட்கொடை இருக்கும் போது வேறெந்த பித்அத்திற்கான தேவையும் இல்லை என்பதை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏதாவது துன்பம் அல்லது சோதனையைக் கண்டால் உடனே தொழுகைக்காக எழுந்து விடுவார்கள். நமது அனுபவமும் முன்னால் சென்ற சான்றோர்களின் அனுபவமும் தொழுகையை விட இறைவனுக்கு அருகில் கொண்டு செல்லும் விஷயம் வேறெதுவுமில்லை என்பதாகும். தொழுகையில் மனிதன் நிற்கும் போது கை கட்டிக் கொண்டுதான் நிற்பார். பிறகு ருகூவின் நிலை கியாமின் நிலையை விட இன்னும் அதிக பணிவை வெளிப்படுத்தும் நிலையாகும். பிறகு சஜ்தா பணிவின் உச்சநிலையாகும். மனிதன் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் நிலையை அடையும் போது இறை சன்னிதானத்தில் சிரம் பணிகிறான். தொழுகையின் முறையை மாற்ற விரும்புகின்ற அறிவீனர்களின் மீது பரிதாபமே! அவர்கள் ருகூ மற்றும் ஸுஜூதின் நிலைகளை ஆட்சேபனை செய்கின்றனர். தொழுகை மிகவும் அழகிய ஒன்றாகும். தொழுகை அதன் உச்சகட்டத்தை அடையும் அளவிலான நிலையை மனிதன் அடையாத வரை மனிதனின் கையில் ஒன்றும் இல்லை. ஆனால் இறைவனின் மீது நம்பிக்கை வைக்காத மனிதர் தொழுகையை எப்படி நம்புவார்? பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். நான் உங்களுக்கு ஒன்றை கூற விரும்புகிறேன்.

‘‘இறைவனிடம் மிகவும் வேதனையுடனும் உருக்கத்துடனும் இவ்வாறு துஆ செய்ய வேண்டும். பழங்கள் மற்றும் பல்வேறு பொருட்களில் பல்வேறு சுவைகளை இறைவன் வழங்கியுள்ளதைப் போன்று தொழுகை மற்றும் இறைவணக்கத்தின் சுவையையும் ஒருமுறை சுவைக்கச் செய்வாயாக. சாப்பிட்டது ஞாபகத்தில் இருக்கும். ஒருவர் அழகான ஒருவரை மிகவும் ரசணையுடன் பார்த்தால் அந்த முகம் அவருக்கு மிகவும் நன்றாக ஞாபகத்தில் இருக்கும். அதே போன்று மிகவும் அசிங்கமான அறுவருக்கத்தக்க ஒன்றை பார்த்தால் அதைப் பற்றி சிந்திக்கும் போது அதன் எல்லா நிலையும் முழு வடிவத்துடன் அவர் முன் தோன்றிவிடும். ஆனால் எந்தத் தொடர்பும் இல்லாவிடில் எதுவும் நினைவிருக்காது. அதே போன்று தொழாதவர்களைப் பொருத்தவரை தொழுகை ஒரு கப்பமாகும். அதிகாலையில் துயிலெழுந்து குளிரில் உளூ செய்து இனிமையான தூக்கத்தை கை விட்டும் இன்னும் பல இன்பங்களை விட்டும் விலகி தொழ வேண்டியதுள்ளது. உண்மை யாதெனில் அவருக்கு தொழுகையில் நாட்டமில்லை. எனவே அவரால் இதைப் புரிந்து கொள்ள முடியாது. தொழுகையில் காணப்படும் இனிமை மற்றும் நிம்மதியைப் பற்றி அவருக்கு தெரியாது. இவ்வாறு இருந்தால் தொழுகையில் இன்பம் எவ்வாறு கிடைக்கும்?

**1906 ஆம் ஆண்டு ஒரு மஜ்லிஸில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அறிவுரை வழங்கியவாறு துஆவின் விஷயத்தில் உதாரணம் கூறி இவ்வாறு விளக்கினார்கள்:** துஆவின் விஷயத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அழகான உதாரணத்தை எடுத்துக் கூறினார்கள். அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு நீதிபதி இருந்தார். அவர் யாருக்கும் நீதியுடன் தீர்ப்பு வழங்காமல் இருந்தார். அல்லும் பகலும் இன்பமான வாழ்க்கையை அனுபவித்து வந்தார். ஒரு பெண்மணியின் வழக்கு அவரிடம் இருந்தது.

அவள் தினமும் அந்த நீதிபதியின் (வீட்டு)வாசலில் வந்து முறையிட்டு வந்தார். இவ்வாறு தொடர்ந்து அந்தப் பெண் அவரிடம் வந்து நீதிக்காக முறையிட்டு வந்தாள். அந்த நீதிபதி எரிச்சல் அடைந்து ஒருநாள் அந்தப் பெண்ணிற்கு நீதியுடன் தீர்ப்பு வழங்கினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்கள் இறைவன் இந்த நீதிபதியைப் போன்றவன் கூட இல்லையா? உங்கள் துஆவை உங்களுக்காக செவியேற்று நீங்கள் வேண்டியவைகளை உங்களுக்கு வழங்குவான். உறுதியான பாதத்துடன் துஆவில் ஈடுபட வேண்டும். ஏற்றுக் கொள்வதற்கான நேரம் கண்டிப்பாக வந்து விடும். இதில் உறுதியாக நிலைத்திருப்பது நிபந்தனையாகும்.

**இன்னொரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

பாருங்கள். தொழுகையை சம்பிரதாய முறையாகவோ அல்லது பழக்கத்தின் அடிப்படையிலோ தொழுவது பயன் தராது. மாறாக இப்படிப்பட்ட தொழுகையாளிகளின் மீது இறைவனே சாபமிடுகிறான். அவர்களின் தொழுகைகள் ஏற்றுக் கொள்ளப்படுவது எங்ஙனம்?

ஃபவய்லுல் லில்முஸல்லீன் – தங்கள் தொழுகையில் கவனமற்றவர்களாகத் தொழுபவர்களுக்கும் அழிவுதான் என்று இறைவன் கூறுகிறான். தொழுகையின் உண்மையையும் அதன் உட்பொருளையும் புரியாதவர்களைப் பற்றி இறைவன் கூறுகிறான். சஹாபா ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அரபி மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்களாவர். எனவே தொழுகையின் உண்மைத்தன்மையை நன்றாக புரிந்திருந்தார்கள். ஆனால் இதன் பொருளையும் அர்த்தத்தையும் தெரிந்து கொள்வது நமக்கு மிகவும் அவசியமாகும். தொழுகையில் இனிமையை உருவாக்க வேண்டும். ஆனால் இந்த மக்களோ ஏதோ புதிய நபி தோன்றி தொழுகையை ரத்து செய்து விட்டார் போன்று காணப்படுகிறார்கள்.

அதாவது தொழுகையைப் புரிந்து கொள்வதற்கு பதிலாக, அதை வெறும் சடங்கு என்ற அடிப்படையில் மட்டுமே கடைபிடிக்கிறார்கள். இதைப் பார்க்கும் போது ஏதோ ஒரு புதிய நபி வந்து இவர்களுக்கு இவ்வாறு தொழ கட்டளையிட்டுள்ளதைப் போல் தோன்றுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

இறைவனுக்கு இதனால் எந்தப் பயனும் கிடையாது. மாறாக மனிதனுக்கே பலன் உள்ளது. மனிதனுக்கு இறைவன் முன்னால் ஆஜராவற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. இறைவனிடம் மன்றாடி வேண்டுதல் புரிவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதன் மூலம் மனிதன் பல்வேறு கஷ்டங்களில் இருந்து விடுபடலாம். மக்களுள் சிலரது பகலும் இரவும் கழிந்து விடுகிறது. ஆனால் அவர்களுக்கு ஒரு இறைவன் இருக்கிறான் என்பது கூட தெரிவதில்லை. இதை எண்ணும் போது மிகவும் நமக்கு கவலையாக உள்ளது. இவ்வாறான மனிதன் இன்றும் அழிந்தான். நாளையும் அழிவான். இதை நன்றாக தெரிந்து கொள்ளுங்கள்.

நான் ஒரு முக்கியமான அறிவுரையை உங்களுக்கு கூறுகிறேன். அந்தோ! இது மக்களின் உள்ளங்களில் நிலைகொள்ள வேண்டுமே! பாருங்கள். வயது கடந்து கொண்டே செல்கிறது. கவனமின்மையை விட்டு விடுங்கள். இறைவனிடம் உருக்கத்தை மேற்கொள்ளுங்கள். தனிமையில் இருந்து கொண்டு இறைவனிடம் துஆ செய்யுங்கள். இறைவன் ஈமானை பாதுகாப்பானாக. மேலும் உங்கள் மீது அவன் திருப்தி கொண்டு மகிழ்ச்சியடைவானாக.

**1907 மார்ச் மாதம் ஓர் அமர்வில்** இருந்த போது அங்கு இரண்டு நண்பர்கள் கோபம் கொண்டுள்ளார்கள் என்ற பேச்சு எழுந்தது. அப்போது அந்த சபையில் அறிவுரை கூறியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

உள்ளம் தூய்மையடையாத வரை துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. உலக விஷயங்களில் ஒரு நபரைப் பற்றி உனது உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி இருக்கும் என்றால் உனது துஆ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. உங்களுள் ஒருவருக்கொருவர் காழ்ப்புணர்ச்சி கொண்டு பொய்யான தற்பெருமையின் காரணமாக ஒருவருக்கொருவர் கோபம் கொண்டால் அதை கைவிட்டு விடுங்கள்.

உள்ளங்களில் காணப்படும் காழ்ப்புணர்ச்சியை வெளியேற்றி விடுங்கள். ஏனென்றால் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி இருந்தால் உனது துஆ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று கூறுகின்றார்கள்.

உலக விஷயங்களின் காரணமாக ஒருபோதும் யாருடனும் காழ்ப்புணர்ச்சி கொள்ளக் கூடாது என்பதை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். உலகம் மற்றும் அதன் ஆதாயங்களுக்காக நீங்கள் ஒருவருடன் பகைமை கொள்வதற்கு இவைகளுக்கு அப்படி என்ன முக்கியத்துவம் உள்ளது?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலை நேரத்தில் நடைப்பயிற்சி செய்வார்கள். அவர்களுடன் சில சஹாபாக்களும் இருப்பார்கள். அப்போது ஏதாவது ஒரு தலைப்பில் கலந்துரையாடல் நடைபெறுவதுண்டு. **1908 ஆம் ஆண்டு ஒரு காலை நேரத்தில் நடக்கும் போது நிகழ்ந்த சம்பவம் இதுவாகும்.** இது ஒரு மிக நீண்ட உரையாடலாகும். அதன் ஒரு பகுதியை நான் எடுத்துள்ளேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். மக்களுள் சிலர் ஒரு காதில் கேட்டு மறு காதில் விட்டு விடுகிறார்கள். இந்த செய்திகளை அவர்கள் மனதில் கொள்வதில்லை. எவ்வளவு அறிவுரை செய்தாலும் அவர்களிடம் எந்த விளைவும் ஏற்படுவதில்லை. இறைவன் தேவைகளற்றவன் என்பதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதிகமாகவும் மீண்டும் மீண்டும் உருக்கத்துடனும் துஆ செய்யாத வரை இறைவன் பொருட்படுத்துவதே இல்லை. ஒருவரது மனைவியோ அல்லது குழந்தையோ நோயுற்றால் அல்லது ஒருவரின் மீது கடுமையாக வழக்கு தொடுக்கப்பட்டால் இதில் அவருக்கு எவ்வளவு வேதனை ஏற்படுகிறது? என்று பாருங்கள். எனவே துஆவிலும் உண்மையான துடிப்பும் வேதனை நிறைந்த நிலையும் உருவாகாத வரை துஆவானது விளைவுகள் ஏதும் இல்லாத வீண் செயலாகி விடுகிறது. துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உருக்கமாக வேண்டுவது நிபந்தனையாகும். இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

*துன்பத்திற்காளானவர் அவனிடம் பிரார்த்தனை செய்யும் போது அவருடைய வேண்டுதலுக்கு பதிலளித்து (அவரது) தீங்கை அகற்றி (வேண்டுதல் புரியும்) உங்களை இப்பூமி முழுமைக்கும் வாரிசாக்குபவன் எவன்? (27:63)*

லாஹுரில் அஹ்மதியல்லாத பிற நண்பர்களும் கலந்திருந்த **ஒரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)** அவர்கள் ஒரு நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதில் துஆவைப் பற்றி இவ்வாறு கூறினார்கள்:

இஸ்லாம் என்பதன் உண்மையான பொருள், இறைவனின் விருப்பத்தின் கீழ் மனிதன் தனது விருப்பத்தை வைத்து விடுவதாகும். ஆனால் மனிதனின் சுய சக்தியால் இந்த தகுதி கிடைக்காது. மனிதன் கடினமாக உழைக்க வேண்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் இந்த தகுதியைப் பெறுவதற்கான உண்மையான வழி துஆவாகும். மனிதன் பலவீனமானவனாவான். துஆவின் மூலம் பலமும் சக்தியும் உதவியும் பெறாதவரை இந்த கடின இலக்கை அடைய முடியாது. இறைவன் மனிதனுடைய பலவீனம் மற்றும் இயலாமையின் நிலையைப் பற்றி இவ்வாறு கூறுகிறான்:

அதாவது ''மனிதன் பலவீனமாகவே படைக்கப்பட்டுள்ளான்''(4:29) எனவே மனிதன் பலவீனமாக இருந்தும் தனது சுய சக்தியால் இவ்வளவு பெரிய பதவியையும் தகுதியையும் அடைந்து விடுவேன் என்று நினைப்பது வீணான எண்ணமாகும். இதற்காக துஆ செய்வது மிகவும் அவசியமாகும். துஆ ஒரு மிகப்பெரிய சக்தியாகும். இதன் மூலம் பெரிய பெரிய கடினமான பணிகளைக் கூட செய்து விடலாம். மிகவும் கடினமான இலக்கை மனிதன் மிகவும் எளிதாக அடைந்து விடுகிறான். ஏனென்றால் துஆ இறைவனிடமிருந்து வெளிவருகின்ற வல்லமை மற்றும் அருள்களை ஈர்க்கும் ஓடையாகும். அதிகமாக துஆவில் ஈடுபடுகின்ற மனிதர் இறுதியில் அந்த அருளை ஈர்த்து விடுகிறார். இறைவனின் உதவிகளைப் பெற்று தனது குறிக்கோளை அடைந்து விடுகிறார். வெறும் வறண்ட துஆக்கள் செய்வது இறைவனின் விருப்பமல்ல. மாறாக எல்லா உழைப்பையும் முயற்சியையும் பயன்படுத்த வேண்டும். அதோடு துஆவும் செய்துவர வேண்டும். காரணிகளை பயன்படுத்த வேண்டும். காரணிகளைப் பயன்படுத்தாது வெறும் துஆ மட்டும் செய்து கொண்டிருப்பது துஅவிற்கான முறையை அறியாததாகும். இது இறைவனை சோதிப்பதாகும். மேலும் காரணிகளை மட்டுமே முழுமையாக சார்ந்து துஆவை பயனற்ற ஒன்று என்று கருதுவது நாத்திகமாகும். துஆ மிகப்பெரிய

செல்வமாகும் என்பதை நிச்சயமாக புரிந்து கொள்ளுங்கள். துஆவை கைவிடாதவரின் மார்க்கத்திலும் பௌதீகத்திலும் பேரழிவு ஏற்படாது. அவர் நாலா புறமும் ஆயுதங்கள் ஏந்திய காவலர்கள் எப்போதும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஓர் அரண்மனையில் இருப்பதைப் போல் ஆவார். ஆனால் துஆவில் அக்கறை காட்டாதவர், நிராயுதபாணியாகவும், பலவீனமாகவும் நாலாபுறமும் கொடிய விலங்குகளால் நிறைந்த காட்டுக்குள் நிற்பவரைப் போன்றவராவார். அவருக்கு நிம்மதியில்லை. அவர் ஒரே நொடியில் கொடிய விலங்கினால் தாக்கப்பட்டு விடுவார். அவரது எலும்பு கூட தென்படாத வகையில் அழிந்து விடுவார். எனவே மனிதனின் பாதுகாப்பிற்கான உண்மையான வழி துஆவாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த துஆ தான் அவனுக்கு அடைக்கலமாகும். எனவே எப்போதும் துஆவில் ஈடுபட்டவாறு இருக்க வேண்டும்.

லாஹுரின் இன்னொரு மஜ்லிஸில் **ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்.** நல்லொழுக்கத்தை சீர்செய்த பிறகு துஆவின் மூலமாக இறைவனின் தூய அன்பைப் பெற வேண்டும்.

அதாவது, உங்களது நல்லொழுக்கத்தை சீர்திருத்துங்கள். அதன் பின்னர் துஆவின் மூலமாக இறைவனின் தூய நேசத்தைப் பெற முயற்சி செய்யுங்கள்.

எல்லாவிதமான தீமையிலிருந்தும் பாவத்திலிருந்தும் விலக வேண்டும். உள்ளத்தின் எல்லா மாசுகளை விட்டும் விலகி ஒரு பரிசுத்தமான துளியைப் போன்று ஆகி விட வேண்டும். இந்த நிலை கிடைக்காத வரை ஆபத்து சூழ்ந்திருக்கும். துஆவுடன் நல்ல திட்டங்களை கைவிடக் கூடாது. ஏனென்றால் இறைவன் திட்டங்களைக் கூட விரும்புகிறான்.

பின்னர் ''அவர்கள் (துங்களிடம் ஒப்படைக்கப்பட்ட) விவகாரங்களை நிர்வகிக்கின்றனர்'' (76:6) என்று திருக்குர்ஆனில் இறைவன் சத்தியம் செய்துள்ளான். எனவே இந்த இலக்கை அடைவதற்கு மனிதன் துஆவும் செய்து திட்டங்கள் வகுத்து செயல்படுகின்ற போது தீங்கு தரும் சபையின் தொடர்புகளை கைவிட்டு சம்பிரதாய அடிப்படையில் செயல்படுவதையும் வெளிவே-த்தையும் விட்டு விலகி உண்மையான உள்ளத்துடன் துஆவில் ஈடுபட்டால் ஒருநாள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அடையாளங்களை காண்பார். கொஞ்ச காலம் துஆ செய்து விட்டு பின்னர் சோர்வடைந்து கைவிட்டு விட்டு நாங்கள் இவ்வளவு கடினமாக துஆ செய்தும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று புகார் செய்வது மக்கள் இழைக்கும் தவறாகும். ஏனென்றால் துஆ செய்வதற்கான உரிமையை அவர்கள் பேணவே இல்லையே! பிறகு அது எப்படி ஏற்றுக் கொள்ளப்படும்? ஒரு மனிதருக்கு பசி ஏற்பட்டால் அல்லது தாகம் ஏற்பட்டால் ஒரு பருக்கை சோறு அல்லது ஒரு சொட்டு தண்ணீர் மட்டும் உட்கொண்டு எனது பசியும் தாகமும் தீரவில்லை என்று புகார் கூறினால் அது ஏற்புடையதாகுமா? ஒருபோதும் ஏற்கப்படாது. உணவும் தண்ணீரும் அவர் முழுமையான அளவு எடுத்துக் கொள்ளாத வரை எந்தப் பயனும் கிடைக்காது. இதே நிலை தான் துஆவின் நிலையும் ஆகும். மனிதன் முழு ஈடுபாட்டுடன் துஆ செய்ய வேண்டும். முழு நிபந்தனைகளையும் நிறைவேற்றியவாறு துஆ செய்ய வேண்டும். துஆ செய்வதற்கான நேரமும் முழுமையாக கிடைக்க வேண்டும். இவ்வாறு செய்தால் ஒருநாள் அம்மனிதர் தனது குறிக்கோளை அடைந்து விடுவார் என்று நம்பிக்கை வைக்கலாம். ஆனால் வழியில் துஆவை கைவிட்ட நூற்றுக்கணக்கான மக்கள் அழிந்து விட்டனர். அவர்கள் வழிதவறி விட்டனர். நூற்றுக்கணக்கானோர் இன்னும் மரணிக்க ஆயத்தமாக உள்ளனர்.

**மேலும் கூறுகின்றார்கள்:** அதே போன்று உச்சி முதல் உள்ளங்கால் வரை தீய செயல்களில் மூழ்கியுள்ளவர்கள் இவ்வளவு தீமையையும் கொண்டிருக்கையில் சில நாட்கள் மட்டும் துஆ செய்வது எப்படி விளைவை ஏற்படுத்தும்? இன்னும் கருமித்தனம், சுயநலம், ஆணவம், வெளிவேஷம் ஆகிய நோய்கள் நற்செயல்களை வீணாக்கி விடுகின்றன. நல்ல செயல்களின் உதாரணம் ஒரு பறவைக்கு ஒப்பானதாகும். உண்மை மற்றும் தூய்மை ஆகிய கூட்டில் அதை அடைத்து வைத்தால் அந்தப் பறவை இருக்கும். இல்லையென்றால் அது பறந்து விடும். ஆனால் இது இறையருள் இன்றி கிடைக்காது. இறைவன் கூறுகிறான்:

*எவர் தன் இறைவனைச் சந்திக்க விரும்புகிறானோ அவர் நற்செயல்களைச் செய்து தன் இறைவனுக்கு வேறெவரையும் இணையாக ஆக்காதிருக்க வேண்டும். (18:111)*

இங்கு நற்செயல்கள் என்பது, அந்த செயல்களில் எந்த வகையான தீங்கின் கலப்படமும் இருக்கக் கூடாது. அதில் நல்ல திறண்கள் நிறைந்திருக்க வேண்டும். அதில் கருமித்தனம் இருக்கக் கூடாது. அதில் ஆணவம் இருக்கக் கூடாது. அதில் மன இச்சைகள் இருக்கக் கூடாது. அதில் மக்களின் பக்கம் கவனமும் எதிர்பார்ப்பும் இருக்கக் கூடாது. அதில் நரகத்தின் அச்சமோ அல்லது சொர்க்கத்தின் ஆசையோ கூட இருக்கக் கூடாது. இறைவனின் மீது கொண்ட நேசத்தால் மட்டுமே அந்த செயல் செய்யப்பட வேண்டும் என்பதாகும். எந்தவொரு எதிர்பார்ப்பும் நற்செயல்களில் கலந்திருக்கும் வரை மனிதன் ஏமாற்றம் அடைவான். இதற்குப் பெயர் ஷிர்க் ஆகும். ஏனென்றால் ஒரு குவளை தேநீர் அல்லது இதர பொருட்களுக்காக மட்டுமே நேசமும் நட்பும் ஏற்படுகிறது என்றால் அந்த நட்பினால் என்ன பலன் இருக்கிறது? இவ்வாறு எதிர்பார்ப்புகள் நிறைந்த மனிதன் ஒருநாள் இதில் மாறுதல் ஏற்படுவதைக் கண்டால் அன்றே தொடர்பை துண்டித்து விடுவான். நமக்கு செல்வம் கிடைக்கும் என்பதற்காகவோ அல்லது சந்ததிகள் பிறக்கும் என்பதற்காகவோ அல்லது இன்னின்ன விஷயங்களில் நாம் வெற்றி பெறுவோம் என்பதற்காகவோ இறைவனிடம் தொடர்பை ஏற்படுத்துபவர்களது தொடர்பு தற்காலிக தொடர்பாகும். இவர்களது ஈமான் ஆபத்தில் உள்ளது. இவர்களது சுய எதிர்பார்ப்புகளுக்கு ஏதாவது பங்கம் விளைகின்ற நாள் வந்தால் அதே நாளில் அவர்களது ஈமானிலும் மாறுதல் ஏற்பட்டு விடும். எனவே உண்மையான மூஃமின் இறைவனை எந்தவொரு ஊன்றுகோலையும் நம்பி வணங்கமாட்டார். இது நடந்தால் நான் இறைவனை வணங்குவேன் என்று கூறமாட்டார்.

**1904 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் லாஹூரில் ஒரு மஜ்லிஸில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

பலர் நாவினால் இறைவனை ஏற்றுக் கொள்வதாக கூறுகிறார்கள். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் அவர்களிடம் நாத்திகம் இருப்பது தெரியவரும். ஏனெனில் அவர்கள் உலக வேலைகளில் ஈடுபடும்போது இறைவனின் கோபத்தையும் அவனது வல்லமையையும் முற்றிலும் மறந்து விடுகின்றனர். எனவே நீங்கள் துஆவின் மூலம் இறைவனிடம் அறிவை வேண்டுங்கள். இது இல்லாமல் முழுமையான நம்பிக்கை ஒருபோதும் பிறக்காது. இறைவனுடன் தொடர்பை துண்டித்துக் கொள்வது ஒரு மரணமாகும் என்பதை உணர்ந்தால் தான் அந்த அறிவு கிடைக்கும். பாவங்களிலிருந்து விலகியிருக்க துஆ செய்கின்ற அதே வேளையில் நல்ல திட்டங்கள் தீட்டுவதை விட்டுவிடக் கூடாது. பாவங்கள் தூண்டப்படுகின்ற சபைகளிலும் அமர்வுகளிலும் சேருவதை விட்டு விடுங்கள்.

குறிப்பாக இது இளைஞர்களுக்கு மிகவும் அவசியமாகும். உலக வீண் காரியங்கள் மற்றும் பாவங்கள் தூண்டப்படுகின்ற எல்லா சபைகளையும் விட்டு விலகுங்கள். அதோடு துஆ செய்து வாருங்கள். இறை நியதியோடு மனிதனுக்கு நேருகின்ற இவைகளிலிருந்து இறைவனின் அருளின்றி ஒருபோதும் விடுதலை கிடைப்பதில்லை. ஐந்துவேளை தொழப்படுகின்ற தொழுகையிலும் இதுதான் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மனிதன் தனது மன இச்சைகள் மற்றும் எழுச்சியிலிருந்து தொழுகைகளை பாதுகாப்பாக வைக்கவில்லையாயின் அது உண்மையான தொழுகையாக ஒருபோதும் ஆகாது. தொழுகை என்றால் தரையில் முட்டுவதோ அல்லது சம்பிரதாய முறைப்படி செய்யப்படும் செயலோ அல்ல. தொழுகையை உள்ளமும் உணர வேண்டும். ஆன்மா உறுகி அச்சத்திற்குரிய நிலையில் இறை சன்னிதானத்தில் விழ வேண்டும். சக்தியுள்ள வரை உருக்கம் மற்றும் ஏக்கத்தை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். மிகவும் உருக்கத்துடன் துஆ செய்ய வேண்டும். தற்பெருமை மற்றும் பாவம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து விலகிவிட வேண்டும். இவ்வகையில் அமையும் தொழுகை மிகவும் அருளுக்குரியதாக இருக்கும். இதில் மனிதன் உறுதியுடன் நிலைநின்றால் இரவிலோ அல்லது பகலிலோ ஒரு ஒளி தனது உள்ளத்தில் வந்து விழுவதை அவர் காண்பார். இதனால் நஃப்ஸே அம்மாரா (தீமையைத் தூண்டக் கூடிய ஆன்மா) வின் எழுச்சி குறைந்திருக்கும். ஒரு பாம்பில் கொடிய விஷம் இருப்பதைப் போல நஃப்ஸே அம்மாராவும் ஒரு கொடிய விஷமாகும். அதை படைத்தவனிடமே அதற்கான சிகிச்சையும் உள்ளது. அதாவது தீமையிலிருந்து விடுதலை பெறுவதற்கான சிகிச்சையை இறைவனிடம் தூய மனப்பான்மையுடன் வேண்டுங்கள். கடின உழைப்புடன் வேண்டுங்கள்.

**1904 -ல் புதிதாக பைஅத் செய்த நபர்கள் இருந்த ஒரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு அறிவுரை வழங்கினார்கள்:**

துஆவிற்காக மனிதன் தனது சிந்தனையையும் மனதையும் அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும். மனிதனின் சிந்தனை உலகத்தின் பால் உள்ளதா அல்லது மார்க்கத்தின் பால் உள்ளதா என்று பார்க்க வேண்டும். அதாவது துஆக்கள் உலக சுகபோகங்களை வேண்டியவாறு உள்ளனவா அல்லது மார்க்கத் தொண்டுகள் செய்வதற்காக அதிக துஆ செய்கின்றானா? என்று பார்க்க வேண்டும்.

இது குறித்துக் கொள்ள வேண்டிய அம்சமாகும். மனிதன் தனது சிந்தனை மற்றும் போக்கு உலகத்தின் பால் சாய்ந்திருக்கிறதா அல்லது மார்க்கத்தின் பால் சாய்ந்திருக்கிறதா? என்று தன்னைப் பற்றி பார்க்க வேண்டுமென்றால் நீங்கள் செய்கின்ற துஆவை இதற்கு அளவுகோளாக ஆக்கிக் கொள்ளலாம். அதாவது நீங்கள் உலக சுகபோகங்களுக்காக அதிகமாக துஆ செய்கின்றீர்களா? அல்லது மார்க்கத்திற்காக துஆ செய்கின்றீர்களா? என்று பார்க்க வேண்டும்.

உட்காரும்போதும், படுக்கும்போதும், எழும்போதும் மனிதனுக்கு உலகத்தைப் பற்றியே கவலை இருக்கின்றதென்றால் மார்க்கத்தைப் பற்றிய சிந்தனை இல்லை என்றால் அவர் தனது இந்த நிலையைக் கண்டு அழ வேண்டும். மக்கள் இடுப்புக் கச்சையை இருத்திக் கொண்டு உலகத்தைப் பெறுவதற்காக கடினமாக உழைக்கிறார்கள். அதற்காக துஆக்களும் செய்கின்றனர். இதன் விளைவாக பல்வேறு நோய்கள் அவர்களைப் பற்றிக் கொள்கின்றன. சிலர் இதில் பைத்தியமாகி விடுகின்றனர். ஆனால் அனைத்தும் மார்க்கத்திற்காக இருப்பின் இறைவன் ஒருபோதும் அவர்களை வீணாக்கமாட்டான். சொல் மற்றும் செயலின் உதாரணம் ஒரு விதையைப் போன்றதாகும். ஒருவருக்கு ஒரு விதையை கொடுத்தால் அவர் அதை வெறுமனே வைத்து விட்டால் அதை அவர் பயன்படுத்தவில்லையாயின் இறுதியில் அது பூசனம் பிடித்து கெட்டுப் போய் விடும். அவ்வாறே சொல் மட்டும் இருந்து அதன்படி செயல் இல்லையென்றால் மெல்ல மெல்ல அந்த சொல் அழிந்து விடும். எனவே செயலின் பக்கம் முன்னேற வேண்டும். ஒரு விதையை நீங்கள் விதைத்தால் அது முளைக்கும். ஆனால் விதைக்காமல் வைத்து விட்டால் அது பூசனம் பிடித்து விடும்.

**1908 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் ஒரு அமர்வில் கலந்துரையாடலின் போது உண்மையான துஆ என்றால் என்ன என்பதை பற்றி இவ்வாறு கூறினார்கள்:**

''துஆ இரண்டு வகைப்படுகிறது. ஒன்று, சாதாரணமாக வேண்டும் துஆவாகும். மற்றொன்று மனிதன் அதன் எல்லை வரை கொண்டு சேர்கின்றான். இந்த துஆ தான் உண்மையான முறைப்படியான துஆ என்றழைக்கப்படுகிறது. கஷ்டம் ஏதும் ஏற்படாமல் இருந்தாலும் மனிதன் துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும்''.

கஷ்டம் ஏற்பட்டால் மட்டுமே துஆ செய்ய வேண்டும் என்பதல்ல. மாறாக, பொதுவான வேளைகளிலும் துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும்.

ஏனென்றால் இறைவனின் தீர்மானம் என்ன என்பதையும் நாளை என்ன நடக்கக் போகிறது என்பதையும் மனிதன் எவ்வாறு அறிவான்? எனவே காப்பாற்றப்படுவதற்காக முன்னதாகவே துஆ செய்யுங்கள். சில நேரம் மனிதனுக்கு துஆ செய்வதற்கான சந்தர்ப்பம் கூட கிடைக்காத படி சோதனைகள் வந்து விடுகின்றன. எனவே முன்னதாகவே துஆ செய்து வைத்திருந்தால் அது இந்த இக்கட்டான தருணத்தில் பயன் தரும். இதுவே துஆவின் முக்கியத்துவமாகும்.

**பிறகு ஒரு சொற்பொழிவின் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

மனிதனின் வெளிப்புறத் தோற்றம் இரண்டு கைகள், இரண்டு கால்கள் ஆகியவை ஒன்றுக்கொன்று உதவுவதற்கான வழிகாட்டியாகும். இந்தக் காட்சி மனிதனிடம் காணப்படுகின்ற போது,

*நேர்மையிலும், இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள்* என்ற வசனத்தின் கருத்தைப் புரிந்து கொள்வதில் கடினத்தை உணர்வது வியப்பிற்குரியதாக உள்ளது.

அதாவது மனித உடலின் அமைப்பை பாருங்கள். கைகள், கால்கள் இருக்கின்றன. ஒவ்வொரு உறுப்பும் பிற உறுப்புகளுக்கு உதவி செய்வதற்காக உள்ளன. இக்கருத்தை கூறுகிறார்கள்.

‘‘காரணிகளையும் துஆவின் மூலமாகவே தேடுங்கள் என்று நான் உங்களுக்கு கூறுகிறேன்’’.

அதாவது உலகப் பொருட்களை சம்பாதிக்க வேண்டுமானால் அதையும் துஆவின் மூலம் செய்யுங்கள்.

ஒன்றுக்கொன்று உதவுவதற்கான பாடத்தை இறைவன் உங்கள் உடலில் அமைத்துள்ள அமைப்பை நான் சுட்டிக்காட்டினால் நீங்கள் என்னை மறுக்க முடியாது. இறைவன் இன்னும் விளக்கமாகவும் தெளிவாகவும் முன்னால் எடுத்துரைப்பதற்காக நபிமார்களின் வருகையின் ஒரு தொடரை உலகில் நிலைநாட்டினான். இறைவன் நாடினால் அந்த நபிமார்களுக்கு எந்த உதவியும் பிறர் மூலம் செய்யப்படாமல் இருந்திருப்பான். இறைவன் இதற்கான முழு ஆற்றல் பெற்றவனாவான். ஆனால் அவ்வாறிருந்தும் ஒரு நேரம் வரும்போது அந்த நபிமார்கள் *அல்லாஹ்விற்காக எனக்கு உதவி செய்பவர் யார்?* என்று கூறுவதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இந்த நபிமார்கள் ஒரு பிச்சைக்காரனைப் போன்றா எழுப்பப்படுகிறார்கள்? இல்லை. மாறாக, *அல்லாஹ்விற்காக எனக்கு உதவி செய்பவர் யார்?* என்று கேட்பதற்கும் ஒரு மகத்துவம் உள்ளது. அவர்கள் உலகத்திற்கு காரணிகளைப் பயன்படுத்துவதற்கான முறையைக் கற்பிக்க விரும்புகிறார்கள். நபிமார்கள் *அல்லாஹ்விற்காக எனக்கு உதவி செய்பவர் யார்?* என்று கேட்கும் போது இதற்கான அவசியம் அவர்களுக்கு ஏற்படுவதில்லை.

இது துஆவின் ஒரு பிரிவாகும். இல்லையெனில் இறைவனின் மீதும் முழுமையான நம்பிக்கையும் அவனது வாக்குறுதிகளின் மீது அசைக்க முடியாத உறுதியும் அவர்களுக்கு இருக்கும்.

*இவ்வுலக வாழ்க்கையிலும் சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)* என்ற இறைவனின் வாக்குறுதி ஒரு நிர்ணயிக்கப்பட்ட திட்டவட்டமான வாக்குறுதியாகும் என்பதை அத்தூதர்கள் நன்றாக உணர்ந்திருந்தனர். இறைவன் யாருடைய உள்ளத்திலும் உதவி செய்வதற்கான எண்ணத்தை உருவாக்கவில்லை என்றால் எவராது உதவி செய்திருக்க முடியுமா? உண்மையான உதவியாளன் இறைவனாவான். இதுவே சத்தியமாகும்.

உலகம் மற்றும் உலகத்தின் உதவி அனைத்தும் இந்த ரஸூல்களின் பார்வையில் சடலத்திற்கு ஒப்பானதாகம். இவைகளுக்கு ஒரு புழுவுக்கு சமமான தகுதியும் இருப்பதில்லை. ஆனால் உலகத்திற்கு துஆவிற்கான ஒரு பெரிய வழியைக் கற்றுக் கொடுப்பதற்காக நபிமார்கள் இந்த வழியையும் கடைபிடிக்கிறார்கள். உண்மையில் அவர்கள் தமது பணியில் உதவியாளனாக இறைவனை மட்டுமே நம்புகின்றனர்.

இறைவன் அவர்களது பணிகளை பிறரின் மூலமாக வெளிப்படுத்துகிறான். நமது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் உதவிக்கான குரலை எழுப்பினார்கள். ஏனென்றால் அந்த சமயம் இறை உதவியின் தருணமாக இருந்தது. அதை அவர்கள் தேடினார்கள்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

துஆவிற்கான உதாரணம் ஒரு சுவையான நீரூற்றின் ஓரத்தில் ஒரு மூஃமின் அமர்ந்திருப்பதற்கு ஒப்பானதாகும். அவர் விரும்பும்போதெல்லாம் அந்த நீரூற்றில் இருந்து தண்ணீர் குடித்து தமது தாகத்தை தணித்துக் கொள்ளலாம். ஒரு மீன் தண்ணீரின்றி உயிர் வாழ முடியாது. அதே போன்று மூஃமினுக்கு துஆ தான் தண்ணீராகும். இது இல்லாமல் அவரால் உயிர் வாழ முடியாது. துஆவிற்கான சிறந்த தருணம் தொழுகையாகும். இதில் ஒரு மூஃமினுக்கு நிம்மதியும், இனிமையும் கிடைக்கிறது. இதற்கு எதிரில் ஒரு உலக சுகவாசி, தான் செய்கின்ற ஏதாவதொரு அயோக்கியத்தனத்தால் அவனுக்கு கிடைக்கும் முழுமையான இன்பம் துச்சமாகும். துஆவினால் கிடைக்கும் மிகப்பெரிய ஒன்று இறை நெருக்கமாகும். துஆவின் மூலமாகத்தான்

மனிதன் இறைவனுக்கு நெருக்கமாகி விடுகின்றான். இதன் மூலம் அவனைத் தன் பக்கம் ஈர்க்கின்றான். மூஃமினுக்கு துஆவில் முழுமையான பணிவும் உருக்கமும் ஏற்பட்டு விட்டால் இறைவனுக்கு மனிதனின் மீது கருணை ஏற்பட்டு விடுகிறது. இதனால் இறைவன் அந்த மனிதனுக்கு நண்பனாகி விடுகின்றான். மனிதன் தனது வாழ்க்கையை சிந்தித்துப் பார்த்தால் இறை உதவிகள் இல்லாவிடில் மனித வாழ்க்கை முற்றிலும் கசப்பாகி விடுவதை உணரலாம். பாருங்கள் மனிதன் தெளிவு பெறும் வயதை அடையும் போது தனது இலாப நஷ்டங்களைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறான். அப்போது தோல்வியின் ஒரு மிகப்பெரிய தொடர் ஆரம்பமாகி விடுகிறது. அவன் அதிலிருந்து தப்பிப்பதற்கு பல்வேறு முயற்சிகளை செய்கிறான். செல்வத்தின் மூலமாகவும் அரசாங்க அதிகாரிகளுடன் தனக்கு இருக்கும் தொடர்பை பயன்படுத்தியும் பல்வேறு சூழ்ச்சிகளின் மூலமும் அதிலிருந்து வெளிவர முயல்கின்றான். ஆனால் அதில் வெற்றி பெறுவது கடினமாகிறது. சில நேரம் இந்தக் கசப்பான செயல்களின் விளைவு தற்கொலையாக அமைந்து விடுகிறது. இந்த உலகவாதிகளின் கவலைகள் மற்றும் துன்பங்களை இறை நேசர்கள் மற்றும் இறை தூதர்களின் கவலைகள் மற்றும் துன்பங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நபிமார்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களுக்கு முன்னால் உலகவாதிகளுக்குரிய கஷ்டங்கள் அற்பமானவையாகும். ஆனால் இந்த கஷ்டங்களும் இன்னல்களும் இந்தத் தூய நல்லடியார்களை கவலையடையச் செய்வதில்லை. நபிமார்களுக்கும், வலிமார்களுக்கும் ஏற்படுகின்ற இன்னல்கள் அவர்களை சோர்வடையச் செய்வதில்லை. அவர்களை கவலை அடையச் செய்வதில்லை. அவர்களின் மகிழ்ச்சியிலும் செழிப்பிலும் எந்த வித்தியாசமும் ஏற்படுவதில்லை. ஏனென்றால் அவர்கள் துஆவின் மூலம் இறைவனின் நட்புறவில் வாழ்பவர்களாவர். ஒருவருக்கு அரசரோடு நெருங்கிய தொடர்பிருக்கும் நிலையில், அந்த அரசர் அம்மனிதர் துன்ப தருணங்களில் தன்னிடம் உதவி கேட்கலாம் என்று அனுமதியும் வழங்கியுள்ளார் என்றால் அவ்வாறான மனிதர் துன்பம் நேருகின்ற போது அத்துன்பம் அந்த அரசரால் நீக்கப்படக்கூடியது என்றால் பிறரை விட இவர் குறைவாகவே துன்பத்தை உணர்வார். எனவே இதைவிட உறுதியான தொடர்பு இறைவனிடம் இருந்தால் அவர் துன்பம் நேரும் தருணங்களில் எப்படி அஞ்சுவார்? அன்பியா அலைஹிமுஸ்ஸலாம் அவர்களின் மீது வருகின்ற துன்பங்களும் இன்னல்களும் நபிமார்கள் அல்லாத பிறரின் மீது இதில் பத்தில் ஒரு பங்கு ஏற்பட்டாலும் அவர்களுக்கு உயிர்வாழும் சக்தி இருக்காது. நபிமார்கள் உலகத்தை சீர்திருத்தும் நோக்கத்துடன் தோன்றுகின்றனர். அப்போது முழு உலகமும் அவர்களுக்கு எதிரியாகி விடுகிறது. இலட்சக்கணக்கான மக்கள் அவர்களின் இரத்தத்தைக் குடிக்க காத்திருப்பார்கள். ஆனால் இந்த அபாயகரமான எதிரிகள் கூட அவர்களின் நிம்மதியில் குறுக்கிட முடியாது. ஒரு சாதாரண மனிதருக்கு உலகில் ஒரு எதிரி இருந்தால் கூட அவரிடமிருந்து ஒருபோதும் பாதுகாப்பாக இருக்க முடியாது. முழு நாடும் அவர்களுக்கு எதிரியானால் பின்னர் என்னவாகும்? இவர்களால் நிம்மதியாக வாழ முடியாது போய் விடும். நபிமார்கள் எல்லா கசப்பான செயல்களையும் எதிர்ப்புகளையும் குளிர்ந்த மனதுடன் சகித்துக் கொண்டனர். இந்த சகிப்புத்தன்மை கூட (முஃஜிஸா) அற்புதமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காட்டிய உறுதிப்பாடு இலட்சக்கணக்கான அற்புதங்களை விட மிகப்பெரிய ஒரு அற்புதமாகும். முழு சமுதாயமும் எதிர்த்து நின்றது. செல்வம், செல்வாக்கு, அழகிய பெண்கள் ஆகியவற்றைத் தருவோம் என்ற ஆசை வார்த்தைகள் இவை அனைத்தும் அல்லாஹ்வின் உயரிய கலிமாவாகிய லாயிலாஹ இல்லல்லாஹ் என்று போதிப்பதிலிருந்து விலகிவிட வேண்டும் என்ற நிபந்தனையோடு தரப்பட்டன. ஆனால் இது எல்லாவற்றிற்கும் எதிராக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நான் இந்தப் பணியை சுயமாக செய்தால் இந்த எல்லா பரிசுகளையும் ஏற்றுக் கொண்டிருப்பேன். ஆனால் நான் இறைவனின் கட்டளையின்படி இந்தப் பணியை செய்கிறேன் என்று கூறினார்கள். மறுபுறம் எல்லா துன்பங்களையும் சகிப்புத்தன்மையுடன் பொறுத்துக் கொள்தல் இது மனித சக்திக்கு அப்பாற்பட்ட பொறுமையும் உறுதிப்பாடும் மனிதனுக்கு இறைவன் வழங்கிய துஆவின் மூலமே கிடைக்கிறது. இவர்களின் வேதனை நிறைந்த துஆ சிலநேரம் கொலை செய்பவரின் முட்டாள்தனமான தாக்குதலை தடுத்து விடுகிறது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக சென்றார்கள் என்ற சம்பவத்தை நீங்கள் கேள்விபட்டிருப்பீர்கள். அபூஜஹில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை கொலை செய்பவர் பல பரிசுகளும் மரியாதையையும் பெறுபவர் ஆவார் என்று ஊருக்குள் அறிவித்திருந்தான். ஹஸ்ரத் உமர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக அபூஜஹிலுடன்

உடன்படிக்கை செய்து விட்டு ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களை கொலை செய்யத் துணிந்து விட்டார்கள். நல்லதொரு நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். விசாரித்ததில் நடு இரவில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கஃபத்துல்லாஹ்வில் தொழுவதற்காக வருவார்கள் என்பது தெரிய வந்தது. இந்த தருணம் தான் சிறந்தது என்று எண்ணி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மாலைப் பொழுதே கஃபத்துல்லாஹ்வில் சென்று ஒளிந்து கொண்டார்கள். நடு இரவில் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற குரல் கேட்க ஆரம்பித்தது. ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஜ்தாவில் தலையை குனியும் போது அவர்களை கொலை செய்து விடுவேன் என்று உறுதிகொண்டார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் வேதனையுடன் இறைவனிடம் மன்றாடினார்கள். சஜ்தாவில் இறைவனை மிக அதிகமாக புகழ்ந்தார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமரின் உள்ளம் இளகி விட்டது. அவரது தைரியம் விலகியது. கொலை செய்ய வேண்டும் என்று துடித்த கை சோம்பேறியாகி விட்டது. தொழுகையை முடித்த பிறகு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வீடு திரும்பிய போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பின் தொடர்ந்து சென்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் யாரோ பின் தொடர்வதை உணர்ந்து உமரே! நீர் என்னை விடமாட்டீரா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் சாபம் கிடைத்து விடக்கூடாது என்ற அச்சத்தால் ஹஸ்ரத்! நான் உங்களை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட்டு விட்டேன் என்று உடனடியாக கூறினார்கள். மேலும் எனக்காக ஃபத்வா செய்து விடாதிருப்பீர்களாக என்றும் கூறினார்கள். இஸ்லாத்தின் மீது என் உள்ளத்தில் அன்பு பிறந்தது அந்த முதல் இரவில்தான் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சபையில் பேசிக் கொண்டிருக்கும் போது இவ்வாறு கூறினார்கள்:**

எதிரி தீய எண்ணத்துடன் நமது ஒவ்வொரு செயலையும் ஆட்சேபனை செய்கின்றான். ஏனென்றால் அவனது உள்ளம் தீயதாகும். ஒருவருடைய உள்ளம் கெட்டுப்போய் விட்டால் பிறகு நாலாபுறமும் இருள் சூழ்ந்து விடுகிறது. இவர் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கிறார். எந்த வேலையும் செய்வதில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் சம்பந்தமாக அவர் வாளை கையில் எடுப்பார் என்றோ அவர் போர் புரிவார் என்றோ எங்கும் எழுதப்படவில்லை. மாறாக மஸீஹின் மூச்சுக் காற்றால் காஃபிர்கள் மரணிப்பார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. அதாவது அவர் தமது துஆவின் மூலம் எல்லா வேலையையும் செய்வார். நான் வெளியே வந்து ஊரில் சுற்றித் திரிவதால் அதாவது நன்மை ஏற்படும் என்று எனக்கு தெரிய வந்தால் நான் ஒரு நொடி கூட இங்கு உட்கார்ந்திருக்க மாட்டேன். ஆனால் சுற்றித் திரிவதால் கால் தேய்ந்து போவதைத் தவிர வேறு எந்த பலனும் இல்லை என்பதை நான் அறிவேன். ஆனால் எல்லா பயனும் துஆவினால் கிடைக்கப் பெறுகிறது. துஆவில் பல சக்திகள் இருக்கின்றன.

ஒருமுறை ஒரு மன்னர் ஒரு நாட்டின் மீது படையெடுத்து சென்றார். வழியில் ஓர் ஏழை மனிதர் அந்த மன்னரின் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து வழிமறித்தான். மன்னரே! நீர் இதற்கு மேல் செல்லக் கூடாது. மீறிச் சென்றால் நான் உன்னுடன் போர் செய்வேன் என்று கூறினார். அந்த மன்னர் மிகவும் வியப்படைந்தார். நீரோ ஆதரவில்லாத ஓர் ஏழை மனிதராயிற்றே. உன்னால் என்னுடன் எப்படி போர் புரிய முடியும்? என்று கேட்டார். அதற்கு அந்த ஏழை மனிதர் நான் அதிகாலைப் பொழுதில் துஆ என்னும் ஆயுதத்தை ஏந்தி உமக்கெதிராக போர் செய்வேன் என்று கூறினார். அதைக் கேட்ட மன்னர் இதை என்னால் எதிர்கொள்ள முடியாது என்று கூறி திரும்பிச் சென்று விட்டார். ஆக, துஆவில் இறைவன் பல சக்திகளை வைத்துள்ளான். இறைவன் எனக்கு மீண்டும் மீண்டும் இல்ஹாம் மூலம் எல்லாம் துஆவின் மூலமே நடக்கும் என்று கூறியுள்ளான். நமது ஆயுதம் துஆவாகும். இதைத் தவிர வேறு எந்த ஆயுதமும் என்னிடம் இல்லை. நாம் மறைவாக இறைவனிடம் வேண்டுவது அனைத்தையும் இறைவன் வெளிப்படையாக நமக்கு காட்டித் தந்து விடுகிறான். கடந்த கால நபிமார்களின் காலத்தில் சில எதிரிகளுக்கு நபிமார்களின் மூலமாக தண்டனை வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இறைவன் நாம் பலவீனமாக உள்ளோம் என்பதை அறிந்து எல்லா பணிகளையும் அவன் தன் கையில் வைத்துள்ளான். இஸ்லாத்திற்காக இன்று இந்த ஒரு வழிதான் உள்ளது. இதை வறண்ட குணமுடைய முல்லாக்களோ அல்லது தத்துவஞானிகளோ புரிந்து கொள்ள முடியாது. நமக்காக சண்டைக்கான வழி திறந்திருப்பின் அதற்காகவும் எல்லா ஏற்பாடும் கிடைத்திருக்கும். நமது துஆ ஒரு

எல்லையை அடைந்து விட்டால் பொய்வாதிகள் தாமாகவே அழிந்து போய் விடுவார்கள். அறிவற்ற எதிரி உள்ளத்தால் இருள் நிறைந்து காணப்படுகிறார். இவருக்கு தூங்குவதையும் சாப்பிடுவதையும் தவிர வேறு வேலை எதுவும் இல்லை என்று கூறுகின்றனர். ஆனால் நம்மைப் பொறுத்தவரை துஆவை விட கூர்மைவாய்ந்த ஆயுதம் வேறெதுவுமில்லை. இதைப் புரிந்து கொண்டவர் அதிர்ஷ்டசாலியாவார். இறைவன் இப்போது எந்த வழியாக மார்க்கத்திற்கு வளர்ச்சியை வழங்க விரும்புகிறான்?

எனவே இவை துஆவைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய கருத்துக்களில் ஒரு சில உதாரணங்களாகும். இதை நான் இன்று உங்கள் முன் வைத்துள்ளேன். அல்லாஹ் துஆவிற்கான கருத்துக்களை நாமும் புரிந்து கொண்டு இதை நமது வாழ்வில் செயல்படுத்துவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. எப்போதும் இறைவனை அடைய வேண்டும் என்ற எண்ணம் நமக்கு இருக்க வேண்டும். அவனது விருப்பத்தைப் பெறுவது நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். ஒவ்வொரு இன்பத்திலும், ஒவ்வொரு துன்பத்திலும் நாம் இறைவன் முன்னிலையில் குனிவது மற்றும் அவனிடம் துஆ செய்வதற்கான முக்கியத்துவத்தை புரிந்தவர்களாக இருக்க வேண்டும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் பைஅத் என்ற உறவை இணைத்துக் கொண்டபடி நம்மீது என்ன பொறுப்புகள் உள்ளன என்பதை புரிந்து கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டும்.

இனி நமது ஒவ்வொரு சொல்லும் செயலும் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக இருக்க வேண்டும். இது நம்மீது இப்போதுள்ள பெரும் பொறுப்பாகும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நம் அனைவருக்கும் வழங்குவானாக. நாம் மார்க்கத்திற்கு உலகத்தை விட அதிக முன்னுரிமை வழங்குபவர்களாக இருக்க வேண்டும். மார்க்கத்திற்காக துஆ செய்பவர்களாக இருக்க வேண்டும். மார்க்கத்திற்காக துஆ செய்பவர்களாக நாம் இருப்போமாக. இந்நாட்களில் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் சார்பாக எதிர்ப்பு இப்போது வலுத்து வருகிறது. எனவே ஜமாஅத்தின் பாதுகாப்பிற்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் எதிரிகளின் ஒவ்வொரு தீங்கையும் அவர்கள் மீதே திருப்புவானாக. ஜமாஅத்தை ஒவ்வொரு தருணமும் பாதுகாப்பானாக.

எங்கள் இறைவா! நாங்கள் எதிரிகளுக்கு எதிராக உன்னை முன் நிறுத்துகிறோம். அவர்களின் தீங்கிலிருந்து உனது காவலில் வருகிறோம்.

என் இறைவா! என் மீது அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எனவே நீயே பழிவாங்குவாயாக.

என் இறைவா! எல்லாமே உனக்கு தொண்டாற்றுகின்றன. என்னை பாதுகாப்பாயாக! எனக்கு உதவி செய்வாயாக! என் மீது கருணை காட்டுவாயாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பாக இந்த துஆவையும் மிகவும் குறிப்பாக செய்து வந்துள்ளார்கள்.

என் இறைவா! இஸ்லாத்தில் நான் இருக்கின்ற நிலையில் எனக்கு மரணத்தை தருவாயாக! நல்லவர்களுடன் என்னை சேர்த்தருள்வாயாக!

எப்போதும் நாம் நல்லவர்களுடன் சேர்ந்தவர்களாக இருப்போமாக. அல்லாஹ் நமது துஆக்களை ஏற்றுக் கொள்வானாக. நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த வழியில் நடத்த விரும்புகிறார்களோ அந்த வழியில் இறைவன் நம்மை வழிநடத்துவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 20.05.2011**

Translated by : **Maulvi S. ABDUL QADIR Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**